## மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி - 2018

---

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை முன்வைக்கும் போது கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அதன் அமைப்பு, முறைமைகள் நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் பேணப்படுதல் வேண்டும்.

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

-

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு | இணங்குகின்றேன். | கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | நியம இலக்கம் 07 இன் 33 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது நிலையான வைப்புக்களின் மீதான வட்டியானது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பபாய்ச்சலாக கம்பனிக்கு மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த ரூபா 30,472,055 தொகையான வட்டி வருமானம் நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமங்களுக்கு இணங்க முகாமை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் 09 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கம்பனியின் செயற்பாட்டு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் கம்பனிக்கு சொந்தமான ரூபா 1,144,830 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் அழிவு நட்டம் உள்ளதா என தேடிப்பார்த்து உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் மேற்படி தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். மாகம்புற துறைமுக முகாமைத்துவம் (தனியார்) கம்பனி சீனா கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதுடன் அதில் எஞ்சியிருந்த அனைத்து ஆவணங்கள் மற்றும் பொறிகள், உபகரணங்கள் கொழும்பு ஸ்ரீலங்கா துறைமுக அதிகாரசபையின் மகாபொல நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அவ்வாறே கொண்டுவரப்பட்ட சொத்துக்களினுள் சிறிய அச்சீட்டு இயந்திரமொன்று (Printer) மாத்திரம் மகாபொல நிறுவனத்தில் உள்ளதாக அந்த பொருட்களுக்கு பொறுப்பாக உள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதி முகாமையாளரொருவர் குறிப்பிட்டிருந்தார். இதுவரையிலும் முகாமைத்துவ பணிப்பாளர் ஒருவர் இல்லாதிருந்தமையால் எதிர்காலத்தில் புதிய முகாமைத்துவம் நியமிக்கப்பட்டதன் பின்னர் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முகாமை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 2.7 இன் பிரகாரம் கம்பனிக்கு சொந்தமான இருப்பானது கிரயம் அல்லது தேறிய இற்றைப்பெறுமதி ஆகிய இரண்டு பெறுமதிகளில் குறைவான பெறுமதிக்கு காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 12,430,943 தொகையான இருப்புக்களின் பெறுமதியானது பெறுமதியினை இறுதி செய்வதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். இருப்பின் பெறுமதியான ரூபா 12,430,943.00 ஆனது நிறுவனத்தில் பௌதீக ரீதியில் இல்லாதிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் பதிவழிப்பதற்காக 2019.8.16 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இந்த பெறவேண்டிய தொகை மற்றும் இருப்புக்களின் பெறுமதியினை பதிவழிப்பதற்காக அமைச்சின் செயலாளரினூடாக நிதி அமைச்சிற்கு 2019.10.30 ஆந் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 2019.11.20 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் போது துறைமுக அதிகாரசபையின் மூலம் interlock blocking, crusher chips stocks & fuel stocks தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் துறைமுக அதிகாரசபையின் மேலதிமாக வினவுதல் பொருத்தமானது என்பதனை குறிப்பிடுகின்றேன் | ஆண்டிறுதியில் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் இருப்பு மீதிகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கிக்கு நேரடியாக அனுப்பப்பட்ட 2018 மார்ச் 26 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 54,000 மற்றும் 2018 ஆகஸ்ட் 11 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 200,000 தொகை வங்கிக் கூற்றுக்களில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணம் சரியாக | இணங்குகின்றேன். அந்த நேரடி மாற்றங்களுக்கு உரிய எவ்வித ஆவணங்கள் / துணை ஆவணங்கள் தேடுவதற்கு முடியாதிருந்தமையால் அந்த நேரடித் மாற்றல்களை ஏனைய செலவினக் | வங்கிக்கு கிடைத்துள்ள பணத்தை குறிப்பாக இனங்கண்டு பின்னர் கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்படும். |

| | | |
| --- | --- | --- |
| இனங்காணப்படாது ஏனைய செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஏனைய செலவினக் கணக்கு ரூபா 254,000 இனால் குறைகணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. பின்னர் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் இந்த ரூபா இரண்டு இலட்சம் தொகையானது நேரடி மாற்றலாக கம்பனியின் செயலாளர் பதவி வகிக்கும் பெண் உத்தியோகத்தரினால் வைப்புச் செய்யப்பட்ட காசோலை என்பது இனங்காணப்பட்டது. | |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2017 நவம்பர் 13 ஆந் திகதி முதல் கம்பனியின் செயற்பாட்டு பணிகள் இடைநிறுத்தப் பட்டிருந்தமையால் 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி கம்பனியினை கலைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2019 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் கம்பனியை கலைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை அத்திகதி வரையிலும் கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் 07 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கம்பனியின் தேறிய நட்டம் ரூபா 2,871 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,795 மில்லியன் மறைப்பெறுமதியினை காண்பித்தது. | 2018 யூலை 19 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் போது நிறுவனத்தின் கணக்குகளை தீர்த்து முடிவுறுத்தும் பணிகள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் 2018.3.12 மற்றும் 2018.8.10 ஆகிய திகதிகயில் கடிதங்கள் மூலம் தலைவர், மாகம்புற முகாமைத்துவ கம்பனியின் தலைவர், இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு இதற்காக துரித நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டு இரு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் கம்பனியை கலைக்கும் பொறுப்பு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு உரியதாகும். | கம்பனியினை கலைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள மையால் அதனை துரிதமாக நடைமுறைப் படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) கம்பனியினால் 2014 ஆம் ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு | இணங்குகின்றேன். கடனை மீள செலுத்துதல் தொடர்பில் உரிய | கடன் மற்றும் வட்டி தொடர்பில் குறித்த தனியார் |

| | | |
|---|---|---|
| செய்வதற்காக உள்நாட்டு தனியார் வங்கி ஒன்றிடமிருந்து ரூபா 3,144,178,059 தொகைக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 24,002,438 தொகையான கடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 224,527,701 தொகையான வட்டி உள்ளடங்கலாக மீள செலுத்தப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 4,025,917,925 தொகைக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 22,029,646 ஆகும். இந்த கடன் மீதி மீதி உறுதிப்படுத்தல் கடிதம் மூலம் குறித்த வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்காதது டன் அதன் காரணமாக இந்த மீதியின் சரியான தன்மை தொடர்பில் நிச்சயமற்ற தன்மையொன்று நிலவியது. மேலும், கம்பனியினால் 2018 ஆம் ஆண்டினுள் கடன் அல்லது வட்டி தொகை எதுவும் மீள செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த கடன் தொகையை தீர்ப்பதற்கு நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் போதுமானதாக அல்ல என்பது அவதானிக்கப்பட்டதுடன் மேலதிக கடனை மீள செலுத்துவதற்காக நடைமுறையொன்றும் நிறுவனத்திடம் காணப்படவில்லை. | வங்கியுடன் உயர்மட்டத்தில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வங்கியுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்கள் தொடர்பில் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| -------------- | -------------- | ---------------------------- | ----------------------------- | ----------------- |
| | ரூபா | | | |
| ஹட்டன் நஷனல் வங்கியின் டொலர் கணக்கு (HNB - Dollar Balance) | 23,226 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | ஹட்டன் நஷனல் வங்கியினால் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தை வழங்குதல் மறுக்கப்பட்டது. | வங்கியுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ஹட்டன் நஷனல் வங்கியின் கடன் மீதி (HNB - Loan Balance) | 3,440,570,990 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | ஹட்டன் நஷனல் வங்கியினால் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தை வழங்குதல் மறுக்கப்பட்டது. | வங்கியுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய பணம் | 17,782,563 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், உப ஆவணங்கள், காலப்பகுப்பாய்வு அறிக்கை | ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய பணம் ரூபா 17,782,563 தொகை இதற்காக பெறவேண்டிய தொகை 2019.08.16 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது நிதிக்கூற்றுக்களில் இருந்து பதவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய பணம் தாமதமின்றி அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| கப்பல் எண்ணெய்க்காக பெறவேண்டிய மீதி (Insurance Receivable for bunkering) | 28,040,453 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், உப ஆவணங்கள், காலப்பகுப்பாய்வு அறிக்கை | இதனை நிதிக் கூற்றுக்களிலிருந்து பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தினை அறவிடுதல் தாமதமடைவதற்கான காரணத்தை கண்டறிந்து அவற்றை அறவிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முகாமைத்துவம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ஏனைய கடன்பட்டோர் | 3,589,879 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், பட்டோலைகள், உப ஆவணங்கள், காலப்பகுப்பாய்வு அறிக்கை | ஏனைய கடன்பட்டோர் ரூபா 3,589,879 நிதிக் கூற்றுக்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தினை அறவிடுதல் தாமத மடைவதற்கான காரணத்தை கண்டறிந்து அவற்றை அறவிடுவதற்கு முகாமைத்துவம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 15,591,171 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், உப ஆவணங்கள், காலப்பகுப்பாய்வு அறிக்கை | ஏனைய அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 15,591,171 தொகையினுள் நட்டஈடு தொகை செலுத்தப்படாத ஊழியர்களுக்காக ரூபா 14,323,749 தொகை ஆண்டின் இறுதியில் ஏனைய செலுத்த வேண்டிய வைகளுக்காக ஒதுக்கப்பட்ட செலவினங்களும் இவற்றுள் உள்ளடங்கும் | கம்பனியினால் பெறவேண்டிய பணத்தினை அறவிடுதல் தாமத மடைவதற்கான காரணத்தை கண்டறிந்து அவற்றை அறவிடுவதற்கு முகாமைத்துவம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் | இணங்குகின்றேன். 2018 ஆம் ஆண்டினுள் நிறுவனத்தின் | இந்த மீதி தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் பெறவேண்டிய நிறுத்திவைத்தல் வரி மீதி ரூபா 3,021,258 ஆக இருந்ததுடன், இந்த நிறுத்தி வைத்தல் வரிகளுக்குரிய வரி சான்றிதழ்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடிான பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 2,985,798 ஆகும். தற்போது கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் மேற்படி நிறுத்தி வைக்கப்பட்ட வரித்தொகையின் வருமான வரி செலுத்தும் போது கழித்துக் கொள்ளுதல் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து எவையும் இடம்பெறாமையால் எவ்வித வருமானமும் கிடைக்கவில்லை. எனவே வருமானவரி பொறுப்பொன்றும் காணப்படவில்லை. | முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஆ) | கம்பனி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து பெற வேண்டிய மீதியாக ரூபா 103,666,952 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளபடியான கம்பினிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 71,819,156 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 31,847,796 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்படி | இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினூடாக ரூபா 66,018,234.45 தொகை மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக குறிப்பிட்டு மீதி உறுதிப்படுத்தல் கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. இந்த ரூபா 66 மில்லியன் வரி நீங்கலாக காண்பிக்கப் பட்டுள்ளதுடன் எமது கம்பனியில் இந்த பெறுமதி வரியுடன் காண்பிக்கப்பட்டுள்ளது. அப்போது வரியுடனான பெறுமதி ரூபா 76,547,855 ஆகும். | மீதி உறுதிப்படுத்தல்களை முன்வைக்காது பெற வேண்டிய மீதிகள் தொடர்பில் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு அல்லது பெறாதிருப்பதற்கு உள்ள இயலுமை கண்டறியப்பட்டு கணக்கீட் நியமங்களின் பிரகாரம் அழிவு நட்ட ஒதுக்கம் மேற்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய மீதிகள் ரூபா 37,648,717 ஆன மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி மீதி உறுதிப்படுத்தப்படாத மீதிகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 25,719,981 தொகையான ரக் யாத்ரா நட்டஈட்டுத் தொகை கிடைப்பதில் நிச்சயமற்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அதற்காக கணக்குகளில் அழிவு ஒதுக்க நட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மேலும், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய எரிபொருள செலவினம் ரூபா 1,399,116 மற்றும் பயணிகள் வள்ளங்களுக்காக நட்டஈட்டுத்தொகையான ரூபா 25,719,981 தொகையும் இந்த மீதியினுள் உள்ளடங்கும். | |
| (இ) | 2014 யூன் 22 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பலொன்றுக்கு ஐ.அ.டொலர் 63,500 தொகையான பற்றுச்சீட்டு பெறுமதியுடனான (IFO) 380 எரிபொருள் 102.42 மெற்றிக் தொன்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த முகவர் நிறுவனத்தினால் அந்த எரிபொருளுக்கான தொகையில் ஐ.அ.டொலர் 47,870.40 தொகையானது மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், எஞ்சிய தொகையான ஐ.அ.டொலர் 15,630 அதாவது ரூபா 2,396,079 தொகையானது 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. எவ்வாறெனினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியினால் | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த கப்பல் முகவர் நிறுவனத்துடன் கலந்துரையாடி கம்பனிக்கு பெற வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய முழுத்தொகைக்காகவும் ஐயக் கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2016 மார்ச் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குரியதான மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ கம்பனி வளாகத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு சொந்தமான வாகனங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,399,115 பெறுமதியான டீசல் மற்றும் பெற்றோல் 11,449 லீற்றருக்குரிய தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றோம். இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளுக்காக துறைமுகங்கள் அதிகாரசசபையினால் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனிக்கு பெறவேண்டிய தொகைகளை தாமதமின்றி அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br><br>i.6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் வரைபு வருடாந்த ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் 2018 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு 2019 செப்டம்பர் 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இணங்குகின்றேன். மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ கம்பனியின் நிதி முகாமையார் மற்றும் கணக்கு உதவியாளர் 2018 திசெம்பர் முதல் பதவியிலிருந்து விலகியிருந்தமை மற்றும் பகுதிநேர சேவைக்காக நிதி முகாமையாளர் ஒருவர் 2019.04.01 ஆந் திகதி | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி நிதி அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும், வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நியமிக்கப்பட்டார். எனவே 2018 ஆம் ஆண்டிற்கான கணக்குகளினை தயாரித்தல் தாமதமாகியது. | |
| (ஆ) | 2015 யூன் 17 ஆந் திகதி பீஈடீ 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவு | i. அரசிற்கு சொந்தமான துணைக் கம்பனிகளின் தலைவர்களுக்கு மாதாந்த படிகளை செலுத்தும் போது வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகள் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனினும், கம்பனியினால் மேற்குறிப்பிடப்பட்டவாறு பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளாது தலைவர்களுக்கு மாதாந்தம் ரூபா 125,000 படி செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. கம்பனியின் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தின் படிகளை செலுத்துவதற்காக மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு பரிந்துரைகள் மற்றும் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் ''ஏ'' (A) வகுப்பின் அரசிற்கு சொந்தமான முயற்சிகளுக்காக செலுத்தப்படும் ஆகக்கூடிய படி ரூபா 12,500 ஆகும். எவ்வாறெனினும், கம்பனியின் செயற்பாட்டு பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்த கூட்டங்களில் | 1 மற்றும் 2 உடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் உரிய அங்கீகாரத்தினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் ஒரு தடவையில் ரூபா 25,000 படி குறித்த வருடத்திற்காக முறையே ரூபா 650,000, ரூபா 1,100,000 சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 801,559,524 ஆன நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் நட்டம் ரூபா 109,286,876 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 692,272,648 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இலங்கை அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானமொன்றின் அடிப்படையில் மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ தனியார் கம்பனியின் செயற்பாட்டு பணிகள் 2017 நவம்பர் 13 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|
| வருமானம் | - | 1,114,042,732 |
| நேர்ச் செலவினம் | (6,805,801) | (456,516,287) |
| நிர்வாகச் செலவினம் | (41,722,417) | (583,475,699) |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | (48,528,218) | 74,050,746 |
| தேறிய நிதிக் கிரயம் | (194,055,646) | (102,622,158) |
| அந்நிய செலாவணி நட்டம் | (558,975,660) | (72,689,790) |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | (801,559,524) | (101,261,202) |
| வருமான வரி | - | (8,025,674) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் | (801,559,524) | (109,286,876) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆந் திகதி நிறைவுசெய்யப்பட்டிருந்தமையின் காரணத்தினால் 2018 ஆம் ஆண்டு கம்பனிக்கு வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய நிதிக் கிரயம் ரூபா 91,433,488 இனால் அல்லது 89 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(iii) 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அந்நிய செலாவணி நட்டம் 486,285,870 இனால் அல்லது 669 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப்பகுப்பாய்வு

| | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 0.31:1 | 0.45:1 |
| விரைவு விகிதம் | 0.31:1 | 0.40:1 |
| செயற்பாட்டு இலாப விகிதம் | - | 6.6% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டின் போது நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 0.45:1 மற்றும் 0.40:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது முறையே 0.31:1 மற்றும் 0.30:1 ஆக குறைவடைந்திருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டு இலாப விகிதம் 6.6 சதவீதமாக காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் செயற்பாட்டு இலாபத்தினை கணிப்பிட முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் செயற்பாட்டு பணிகள் நிறுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 07 உத்தியோபத்தர்களுக்காக 2018 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 12,809,011 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நிதி முகாமையாளரினை தவிர ஏனைய உத்தியோகத்தர்களின் நியமன கடிதங்கள், கடமை தொடர்பான விபரங்கள், செய்வேலை அறிக்கைகள் மற்றும் அனைத்து | இணங்குகின்றேன். குறித்த பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் ஆறு மாதத்திற்கு நியமனக் கடிதம் வழங்குவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பவர் ஒருவரை நியமிக்கும் வரை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது வருகை பதிவேடுகள் மற்றும் செய்வேலை அறிக்கைகள் பரிசோதிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களினதும் வருகை பதிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் நிறைவேற்றிய பணிகளின் அளவானது பிரச்சினைக்குரியதாக இருந்தது.<br><br>மேலும், MPMC/01/2018 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 06 மாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் இந்த உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த காலத்தினை நீடிப்புச் செய்யாமல் 05 மாதங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து குறித்த காலப்பகுதிக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5,543,005 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த அடிப்படையில் 07 உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு உரியதாக 2018.02.15 ஆந் திகதி எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், பேரேட்டுக் கணக்குகளை பேணுதல் மற்றும் ஊழியர் நட்டஈடு செலுத்தும் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>தொழில் சமரசம் A-37-2017 ஆம் இலக்க வழக்கின் இரு தரப்பினரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சமனான நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த 07 உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த கொடுப்பனவுகள் அப்போதைய உயர் மட்ட முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே இணைத்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்த காலம் மீறப்பட்டுள்ள தாயின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று காலத்தை நீடிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்டுள்ள நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 173,727 ஆக காண்பிக்கப்பட்டிருந்த சில்லறைக் காசேட்டு மீதி | இணங்குகின்றேன். 2019.04.01 ஆந் திகதி மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான கொடுப்பனவு உறுதிச்சீட்டு | காசு மீதி இல்லாதிருந்தமை தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் |

| | | |
|---|---|---|
| 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் புத்தகங்களில் காணப்பட்டதுடன் கம்பனிக்குச் சொந்தமான பௌதீக ரீதியில் அந்த பணம் காணப்படவில்லை. | ஆவணங்கள் மற்றும் குறித்த ஆவணங்களை பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்திலும் நிறுவனத்திற்கு சொந்தமான பௌதீக ரீதியில் ரூபா 174,479 தொகையாக காணப்பட்ட சிறு கட்டுநிதி மீதிகள் காணப்படவில்லை. இது 2017 ஆம் ஆண்டின் கணக்குகளிலும் காண்பிக்கப்பட்ட நிலைமையொன்றானமையால் முன்னாள் முகாமையாளருக்கு உரிய பொறுப்பொன்று என்பதனை காண்பிக்கின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குத் தன்மையினாலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியின் ஊழியர்களுக்கு நட்டஈடு செலுத்தி அகற்றும் போது ஏற்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமை தொழிலாளர்கள் திணைக்களத்தின் கொழும்பு தொழில் நியாய நீதிமன்றத்தின் தொழிலாளர்கள் சமசர A/37/2017 ஆம் இலக்க தீர்மானம் மற்றும் 2018 பெப்ரவரி 02 ஆந் திகதி இரு தரப்பினரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சமமான நிபந்தனைகளுக்கு இணங்கியமையின் அடிப்படையில் தீர்க்கப்பட்டிருந்தது. இணக்க உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 18(ஆ) இன் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திற்கான நிலுவை மேலதிக நேர படிகள் மற்றும் / அல்லது 2018 சனவரி மாதம் வரையான நிலுவை சம்பளம் செலுத்தப்பட வேண்டியிருப்பின், அந்த கொடுப்பனவுகள் 2018 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி நிறைவுசெய்யப்பட வேண்டுமென | இணங்குகின்றேன். இது 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் முகாமைத்துவமும் இதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதைக் காண கூடியதாக இருந்தது. மேலும், 2019 மார்ச் மாதம் முதல் புதிய முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய பெரும்பாலான ஆவணங்களை கண்டறிதல் சிரமமாக உள்ளது. 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட இந்த செலவினங்களை மீள அறவிடுவதற்கு இந்த கம்பனியின் ஊழியர்கள் எவரும் இதுவரையிலும் இல்லை. | நட்டஈட்டுத் தொகையினை செலுத்தும் போது இணக்க நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஏதேனுமொரு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது எனின் உரிய கொடுப்பனவுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தரிடம் அவற்றை மீள அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணங்கியிருந்தது. மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ கம்பனியினால் அவ்வாறே இணங்கிய நிபந்தனைகளுக்கு முரணாக கம்பனியின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமையினால் செலுத்துவதற்கு உரித்தற்ற 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய போக்குவரத்துச் செலவினம், தங்குமிட பணிகள், செயலாற்றல் படிகள் மற்றும் வாகன படிகளாக ரூபா 12,211,073 தொகையான ஏனைய படிகள் கம்பனியின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | முகாமைத்துவ பணிப்பாளருக்கு மாதாந்தம் ரூபா 90,000 படி 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,080,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், சேவைக்கு வருகை தந்தமையை உறுதிப்படுத்தும் வருகை பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் வருகை பதிவேட்டினை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சேவைக்கு வருகை தந்தமையை உறுதிப்படுத்திய பின்னர் சம்பளம் செலுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினுள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அனைத்தும் தொடர் இலக்கங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பாதுகாப்புடன் பேணப்பட வேண்டும். அவ்வாறே அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் கணக்காய்விற்காக பூர்த்தி செய்யப்பட்டு ஆயத்தமாக வைத்திருப்பதற்கு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு | இணங்குகின்றேன். மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியினை கலைத்து அதனை சீன கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் மாகம்புற துறைமுகத்திற்கு சொந்தமாக இருந்த அனைத்து ஆவணங்கள் (கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்றன) கொழும்பு | கம்பனியின் ஆவணங்கள் மற்றும் சொத்துக்கள் துறைமுகங்கள் அதிகாரசபைக்கு கொண்டுவரும் போது அந்த பணிகளை முறையாகவும் கிரமமாகவும் மேற்கொண்டிரா மையால் அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய |

| | | |
|---|---|---|
| பொறுப்பான உத்தியோகத்தர் பதில் கூற வேண்டும். எனினும், மாகம்புற துறைமுகங்கள் முகாமைத்துவ கம்பனி 2017 ஆம் ஆண்டிற்கு உரியதாக ரூபா 29,975,094 பெறுமதியான 104 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 4,543,395 பெறுமதியான 19 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | துறைமுகத்தின் மகாபொல இற்கு லொறிகளில் ஏற்றப்பட்டு பாதுகாப்பற்ற முறையில் கொண்டு செல்லப்பட்டுள்ளமையை அறியக்கூடியதாக இருந்தது. அவ்வாறே, இந்த ஆவணங்களின் பொறுப்பிற்காக எவ்வித நிரந்தர உத்தியோகத்தரும் அப்போது இல்லாதிருந்தமையால் இந்த ஆவணங்களின் பொறுப்பினை எவரும் ஏற்றிருக்கவில்லை. 2019.04.01 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற புதிய நியமனத்துடன் எமக்கு கையளிக்கப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அனைத்தும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டதுடன் இந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை கண்டறிய முடியாதுள்ளது என்பதனை தொடர்ந்தும் தெரிவிக்கின்றேன். | ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>அவ்வாறே இந்த பணிகள் முறையாகவும் சிரத்தையுடனும் மேற்கொள்வதற்கு தேவையான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டனினை வழங்குதல் தாய்க் கம்பனியின் மற்றும் வரிசை அமைச்சின் பொறுப்பாகும். |